நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 688/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கோபாலன் |
| தந்தை / கணவர் பெயர் | : | கோவிந்தன் |
| கிராமம் | : | வெடிக்காரனூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 33 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜுலை மாதம், 22–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–7.31 PM

1. நான் தற்போது எடப்பாடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்து வருகிறேன். நான் கடந்த **3.12.2024** ம் தேதி 14.00 மணிக்கு கொளத்தூர் காவல் நிலையத்தில் பணி புரிந்தபோது காவல் ஆய்வளார் உத்தரவு படி நானும், தலைமை காவலர் பழனிசாமி மற்றும் சிறப்பு காவல்

உதவி ஆய்வாளர் மகாலிங்கம் ஆகியோருடன் மதுவிலக்கு மற்றும் குற்றத்தடுப்பு சம்பந்தமாக கொளத்தூர் பகுதியில் கண்காணித்துக்கொண்டு வந்தோம்.

2. அப்போது கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கொளத்தூர் தண்டா 4 ரோடு பகுதியில் கண்காணித்து சென்றபோது அங்கு கூட்டமாக இருந்தார்கள். அப்போது சந்தேகத்தின் பேரில் அங்கு சென்று சோதனை செய்தோம். அங்கு மதுபானம் பாட்டில்கள் சத்தம் கேட்டு விசாரித்த போது அவர் தன்னுடைய பெயர் கோவிந்தன் த/பெ.மாணிக்கம் என்று சொன்னார்.

3. அவர் வைத்திருந்த கட்டைப்பையை சோதனை செய்து பார்த்த போது 180 Black Peral **பிராந்தி பாட்டில்கள் –30** இருந்ததை கண்டறிந்தோம். அதுப்பற்றி கேட்டபோது பக்கத்தில் இருந்த 3 மதுபான கடைகளில் 4 நாட்களாக சிறுக சிறுக மதுபான பாட்டில்களை வாங்கி கள்ள சந்தையில் விற்பனை செய்து வருவதாக குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

4. பிறகு எதிரியை கைது செய்வதற்கான காரணம் கூறி **14.30 மணிக்கு** கைது செய்தும், அவர் வைத்திருந்த மதுபாட்டில்களையும் காவல் நிலையம் கொண்டுவந்து காவல் நிலையத்தில் வைத்து **14.45 மணிக்கு** கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தோம். அதில் நானும், தலைமை காவலர் பழனிசாமி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. பிறகு நிலையம் வந்து எதிரி மற்றும் கைப்பற்றிய பொருட்களுடன் 15.00 மணிக்கு நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண்.345/2024, ச.பி 4(1)(C) TNP Act –ன் படி வழக்கு பதிவு செய்தார். வழக்கு சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. நாங்கள் சென்று பார்க்கும் போது அந்த இடத்தில் எதிரியிடம் மதுபான பாட்டில்களை வாங்குவதற்கான யாரும் அங்கு காத்திருக்கவில்லை. அதற்கு முன்னர் மதுபானபாட்டில்கள் வாங்கிய பழைய வாடிக்கையாளர்கள் யாரையும் விசாரிக்கவில்லை.

2. எதிரி கடை வைத்திருக்கும் இடம் மக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். அந்த இடத்தில் எந்த நேரத்திலும் பொதுமக்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். நாங்கள் ரோந்திற்கு செல்லும் போது சம்பவ இடத்தில் 4–5 நபர்கள் இருந்தார்கள். அவர்களை நாங்கள் விசாரிக்கவில்லை. கைப்பற்றுதல் மகசரை காவல்நிலையத்தில் வைத்து சிறப்பு உதவி ஆய்வாளர் மகாலிங்கம் என்பவர்தான் தயார் செய்தார். சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யவில்லை.

3. நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சொன்ன நேரத்தில் மதுபான பாட்டில்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், அதனால்தான் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக வைத்து மதுபானபாட்டில்களை கைப்பபற்றவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து மதுபான பாட்டில்களை வாங்கியவர்களை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

4. சம்பவ இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு புள்ளி விவரக்கணக்கிற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி மதுபானங்கள் வாங்கியதற்கான ரசீது எதனையும் நாங்கள் கைப்பற்றவில்லை. இந்த வழக்கில் சொல்லியுள்ள மதுபானங்கள் அனைத்தும் அரசு மதுபான கடையில் இருந்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். அது சம்மந்தமாக அரசு மதுபான கடை ஊழியர்களை யாரையும் நாங்கள் விசாரிக்கவில்லை.

5. கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை நிலைய எழுத்தரிடம் ஒப்படைத்துவிட்டோம், அதன் பிறகு என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி மதுபான பாட்டில்களை கைப்பற்றும்போது புகைப்படம் மற்றும் வீடியோ எதுவும் எடுக்கவில்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 7.40 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**